ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி



ித சதாசகாய
திருத்தல
விழா
ம் – செப்டம்பர் 7ம்
ராதனைகள்,
டுகள்
அன்னையே!
க்காக
கொள்ளும்



40/=

செப்டம்பர் – 2014




விழா
கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**செப்டெம்பர் – 2014**

மலர் - 46 இதழ் - 08

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.




## உள்ளே....


அன்புடன் உங்களோடு .................. 01
48வது உலகத் தொடர்பு .............. 02
இலக்கிய மஞ்சரி .......................... 04
புனிதர்களை அறிவோம் .............. 05
குருத்துவ வாழ்வில் பொன் .......... 06
வீட்டு மருத்துவம் .......................... 07
திருப்பம் ........................................... 08
எண்ணிப்பார்க்கையில் .................. 09
அதிகார நரகம் ................................ 10
வரலாற்றில் மனித உரிமை ......... 11
மாணவர் பக்கம் .............................. 14
பாடசாலை விளையாட்டுப் ........... 15
தொண்டனின் சில நிமிடம் .......... 17
மட்டக்களப்பிலிருந்து இயேசு ...... 19
திரை விமர்சனம் ........................... 20
புனித அன்னை தெரேசா ............ 22
கடுகுக் கதை .................................. 24
தீர்க்கதரிசனங்களின் நிலம் ........ 25
விவிலியம் கற்போம் ..................... 27
அறிவை வளர்ப்போம் .................. 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


**SOCIAL COMMUNICATIONS CENTRE**
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு ......!

ஓர் உடைந்த மண் பானை இவ்வாறு பேசியதாம்ஹ

"நான் நன்றாக இருந்தபோது தண்ணீர் தாங்கினேன், ஓட்டை விழுந்தது. புளி வைத்து அடைத்துத் தானியம் போட்டனர், இன்னும் அதிகமாக உடைந்து போனேன். என் கழுத்தைப் பானைகள் வைக்கப் பயன் படுத்தினீர்கள், முழுவதுமாக உடைந்து போனேன். சிறு பிள்ளைகளின் விளையாட்டுப் பொருளாகினேன். வாழ்வின் இறுதிவரை நான் பயன்படுகின்றேன். மனிதா நீ...?

மனித வாழ்வின் நோக்கமே பிறருக்கு உதவி செய்து ஓர் அர்த்தமான வாழ்வு வாழ்வதுதான். மகிழ்ச்சியின் வேர்கள் சேவை யெனும் மண்ணில்தான் படர்ந்து வளர முடியும். யூத மத நூலான டால்மட் (*TALMUD*) கடவுள் இந்த உலகைப் படைத்தது குறித்து ஓர் அழகான கதைசொல்கிறது. 'கடவுள் முதலில் அன்பை மட்டும் மூலக் கூறாக வைத்து இந்த உலகை உருவாக்கினார், ஆனால், உலகம் சரியாக இருக்கவில்லை. பின்பு நீதியை மட்டுமே மூலக்கூறாக வைத்து மற்றொரு உலகைப் படைத்தார். அதுவும் அவருக்குச் சரியாகப் படவில்லை. பின்பு நீதியையும் அன்பையும் சம விகிதத்தில் கலந்து ஓர் உலகைப் படைத்தார், அதுவே இந்த உலகம். இந்த உலகத்தின் ஆணிவேராக இருப்பது அன்பும் நீதியுமே என்ற உண்மையைச் சுட்டிக் காட்டுகிறது இந்த யூதக் கதை.

எல்லா மதங்களின் போதனைகளின் சாரம்சமாக இருப்பது இவையிரண்டுமே. இவற்றில் குளறுபடி ஏற்படுவது நல்லதல்ல. அன்பை சதையிலும், நீதியைப் பணத்திலும் தேடும் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உண்மையான அன்பு என்பது பிறருக்காகத் தன்னையே முழுமையாகக் கையளிப்பது, பிறர் நலனில் அக்கறை கொள்வது, மற்றவனின் நலனை நாடுவது. உண்மையான நீதி என்பது சரியானவற்றை செய்வது, எல்லோருக்கும் ஏற்றம் தருபவற்றை நாடுவது. இப்படிப்பட்ட அன்பையும் நீதியையும் கடைப்பிடிக்கின்ற மக்களாக நம்மை மாற்றுவதே எல்லா மதச் சடங்குகளின் நோக்கம். இன்று இவ்வுலகில் அன்பு இல்லை, நீதி இல்லை, இரக்கமில்லை. காரணம், இன்று ஒரு நாடு இன்னொரு நாட்டையும், ஓர் இனம் இன்னோர் இனத்தையும் விழுங்கும் நிலை காணப்படுகின்றது. மனிதர்கள் மிருகங்களை விட படு கேவலமாக நடத்தப்படுகின்றார்கள். இன்று இஸ்ரேல், பலஸ்தீன மண் பற்று பல மனித உயிர்களைக் குடித்த வண்ணம் இருக்கின்றது. மண்ணுக்கே சொந்தமாகப் போகும் மனிதன், மண்ணுக்காகச் சண்டை போடுவதுதான் வேடிக்கையாக இருக்கின்றது. நாம் பிறர் நலனுக்காகச் சேவையாற்ற, கடமை புரிபவர்களாக இருக்க வேண்டும்.

திருத்தந்தை 6ம் பவுல் கூறுகிறார்ஹ

**"ஒரு நீதியற்ற சமுதாயம், நீதியாக வாழ விரும்பாத சமுதாயம் தன் எதிர்காலத்தை அபாயத்துக்குள்ளாக்குகின்றது".**

எனவே, பிறர் நலனுக்காக நாங்கள் உழைத்து, நீதி, அன்பு, இரக்கம் உள்ள பணியாளர்களாக நாம் செயற்பட முனைந்திடுவோம்.

**"ஒடுக்கப்பட்டோர் மற்றும் ஒதுக்கப்பட்டோர் ஆகியோருக்குச் செய்யப்படும் சேவையே உண்மையான செபம்"**

— மகாத்மா காந்தி —

— ஆசிரியர் —

**இறைவாக்கு**

**"பரிசேயரே நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மையாக்குகிறீர்கள். ஆனால், உங்களுக்கு உள்ளே கொள்ளையும், தீமையும் நிறைந்திருக்கின்றன"** (லூக் 11:39)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மட்டக்களப்பில் நடைபெற்ற

# 48வது உலகத் தொடர்பு தின விழா - 2014

### “மனித உரிமைகளை மதித்து டிஜிற்றல் உலகை நமதாக்குவோம்”

கத்தோலிக்க திருச்சபை ஆண்டு தோறும் அனைத்துலக அளவில் கொண்டாடும் உலகத் தொடர்பு தினம் மட்டக்களப்பு மறை மாவட்டத்திலும் கொண்டாடப்பட்டது. இது தொடர்பாக மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் ஏற்பாடு செய்த உலகத் தொடர்பு தின விழா, கடந்த மாதம் 09ம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

“நாம் டிஜிற்றல் உலகில் நம்பிக்கையும், மனத் துணிச்சலும் கொண்ட பிரஜைகளாவோம். இன்று மக்களுடன் கலந்துரையாடவும் கிறிஸ்துவை எதிர்கொள்ள அவர்களுக்கு உதவும் நோக்கிலும் தொடர்பாடல் உலகம் பற்றி திருச்சபை அக்கறை கொள்ள வேண்டும்; அதனை உள்வாங்க வேண்டும்''.

இவ்வாறு இவ்வாண்டு உலகத் தொடர்பு தினத்துக்காக விடுத்திருந்த செய்தியில் திருத்தந்தை குறிப்பிட்டிருந்தார். இதற்கேற்பவும் இவ்வாண்டை மனித உரிமைகள் ஆண்டாக மட்டக்களப்பு மறைமாவட்டம் பிரகடனப்படுத்தியுள்ளதைக் கருத்தில் கொண்டும்,

'“மனித உரிமைகளை மதித்து டிஜிற்றல் உலகை நமதாக்குவோம்' என்னும் கருப்பொருள் விழாவிற்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் பேராசியர் எஸ்.மௌனகுரு அவர்கள் ஆற்றிய சிறப்புரை பலரது கவனத்தையும் ஈர்த்ததுடன், பாராட்டும் பெற்றது.

அவர் தமதுரையில், ‘தொடர்பாடலின் வளர்ச்சியையும் இன்று டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் அது அடைந்துள்ள உச்சத்தையும், அது இன்று எவ்வாறு பலதரப்பட்ட மக்களிடையில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதையும் விளக்கியதோடு,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதன் பயன்பாட்டையும், அது ஏற்படுத்தும் கலா சாரச் சீரழிவுகள், சுரண்டல் பொருளாதார அமைப்புகள் வளர்க்கும் நுகர்வுக் கலாசாரம் மற்றும் அதன் விளைவுகள் பற்றியும் தமது ரையில் குறிப்பிட்டார். நவீன தொடர்புத்துறை நம்மை அறியாமலே கவர்ச்சியான முறையில் நம்மை ஏமாற்றி, சுரண்டி அடிமைப்படுத்தி விடுவதிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் விழிப்பு ணர்வு தேவை என்பதை அவரது உரை உணர்த்தி நின்றது.



விழாவுக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருள்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை தலைமை வகித்தார். அவர் தமது ரையில், "தொடர்பூடகங்களின் ஆற்றலையும் திருச்சபை அதற்குக் கொடுக்கும் முக்கியத்து வத்தையும் திருச்சபைப் பணிகளில் அவற்றைப் பயன்படுத்த வேண்டிய தேவைகளையும் திருத் தந்தையின் தொடர்புதினச் செய்தியின் பின்னணி யில் எடுத்துரைத்ததோடு தொடர்பூடகங்களைக் கையாள்வதில் இன்றுள்ள இடர்ப்பாடுகளைப் பற்றியும் எடுத்துக்கூறினார்.

சமூகத் தொடர்பு நிலைய இயக்குனர் அருள்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் வரவேற் புரை வழங்க, முதன்மை விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் கலை கலாசாரப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் அவர்கள் வருகை தந்திருந்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்முனை மறைக் கோட்ட முதல்வர் அருள்தந்தை ஜீ.அம்புறோஸ் அவர்களும், மட்டக்களப்பு மறைக்கோட்ட முதல் வர் அருள்தந்தை ஜே.எஸ். மொறாயஸ் அவர்க ளும் வருகைதந்து சிறப்பித்தனர்.

இவ்வாண்டில் தொடர்புசாதன விருது பெறும் கலைஞர்களாக நாடகம், கலை, இலக் கியத் துறைகளுக்காக அருள்தந்தை. யோசப்மேரி இ.ச அவர்களும் கலை, இலக்கிய ஊடகத் துறைகளுக்காக பெஸ்லியோ வாஸ் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட் டனர். இவர்கள் பற்றிய பாராட்டு களை முறையே ஆனந்தா A.G. இராஜேந்திரம் மற்றும் ஏ. ஜெகனாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

கிழக்குப் பல்கலைக்கழக அழகியற் கற்கைகளுக்கான நிறுவன மாணவர் கள் வழங்கிய வரவேற்பு நடனம் பலரையும் கவர்ந்தது. அதுபோல், புனித சிசிலியா பெண் கள் ம.வி. மாணவிகள் வழங்கிய 'ஏழு கன்னி யர்' பாரம்பரிய நடனம் (கூத்து) பலரது பாராட் டையும் பெற்றது இங்கே குறிப்பிடத்தக்கது. இதனைக் கலைக்கோட்டன் அ. இருதயநாதன் அவர்கள் எழுதி இயக்கியிருந்தார்.

இறுதியாக சமூகத் தொடர்பு நிலைய வெளியீடான 'தொண்டன்' இதழின் பணியாளர் கள் அன்பளிப்புகள் பெற பி.டீ.ஏ. ஜெயக்குமார் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது. நிகழ்ச்சிகளை சில்வெஸ்டர் ஜூலியானா தொகுத்து வழங்கினார்.

குறும்(புப்)பா – 138

உடுத்தவுடை யோடோடி உயிரடங்கி
உயிரணுக்கள் காய்ந்துவுளம் நடுநடுங்கி
படுக்கஇட மின்றிமனம் பரிதவிக்க வைத்தவர்கள்
பகர்வதோ சமாதானம் அபிவிருத்தி!



– மலர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய மஞ்சரி

# நன்றி



என்னை இனங்கண்டு கௌரவித்த சமூகத் தொடர்பு நிலையத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வாழும்போதே வாழ்த்த வேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஆயர் அவர்கட்கும், இயக்குனர் அவர்கட்கும் குறிப்பாக மலர்வேந்தன் அவர்கட்கும் 'தொண்டன்' குடும்பத்தாருக்கும் எனது பணிவுகள்.

என்னைப் பயிற்றுவித்து, இலக்கியத்திலும், ஊடகத் துறையிலும் ஈடுபடவைத்த களமாக அமைந்தது 'கத்தோலிக்க திருச்சபை' என்றால் அதுதான் உண்மை. 'புதிய உலகம்' சஞ்சிகையாகட்டும், 'தொண்டன்' ஆகட்டும், 'புதிய உலகம்' வானொலி நிகழ்ச்சியாகட்டும், 'கத்தோலிக்க நற்சிந்தனைகள்' ஆகட்டும் எல்லாமே திருச்சபை சார்ந்தவைதான். எனவே கத்தோலிக்க திருச்சபைக்கு எனது விசுவாசம் மிக்க நன்றிகள்.

என்னை ஆளாக்கிவிட்ட பெற்றார்கட்கும், கற்பித்துவிட்ட ஆசிரியர்கட்கும், என்னுடன் என்றும் இணைந்திருந்து, அரவணைத்து ஆதரவளிக்கும் மனைவி மற்றும் மகன்மார்கட்கும் இதயம் கனிந்த அன்பு நன்றிகளைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



அத்துடன் எனது நண்பர்கள், ஊடகத் துறை சார்ந்தவர்கள் அனைவருக்கும் என் தலை வணக்கங்கள்.

என்னை முதன்முதலில் இனம் கண்டவர்கள் இருவர்.

ஒருவர் அருட்பணி போல் சற்குணநாயகம் இ.சபை அடிகளார், திருகோணமலை – மட்டக்களப்பு இளைஞர் ஆணைக் குழுவில் உறுப்பினராக்கி உயர்த்திவிட்டவர்; மற்றயவர் மலர்வேந்தன் அண்ணன் அவர்கள். உங்கள் இருவருக்கும் என் பணிவுகள்....!

என்றும் விசுவாசத்துடன்

ஆழியோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம்

நடத்தும்

## மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

2014 செப்டம்பர் 24

**காலை 09.15 மணி முதல் 11.45 வரை**

**சாள்ஸ் மண்டபம்**

**மட்டக்களப்பு**

க.பொ.த. உயர்தர · சாதாரண தர மாணவர்களுக்காக நடத்தப்படும் இக்கருத்தரங்கில் ஏனையோரும் கலந்துகொள்ளத் தடையில்லை

- மனித உரிமைகளும் நமது கடமைகளும்
- கல்விசார் மனித உரிமைகள்
- மனித உரிமைகளும் பெண்ணியமும்
- தொடர்புசாதனங்களும் மனித உரிமைகளும்

(உரைகளும், உரையாடல்களும்)

**மனித உரிமைகளை மதித்து வாழ்வைப் பெறுமதியாக்குவோம்!**




— மற்றில்டா இராஜேந்திரம் —

**புரட்டாதி 01ம் திகதி : புனித கைல்ஸ்**




**7ம்** நூற்றாண்டில் அத்தேனியன் பிரபுக்கள் குடும்பத்தில் கைல்ஸ் பிறந்தார். இவரது பக்தி மிகு வாழ்வு முறையும், இவர் பெற்றுக்கொண்ட கல்வியும் மெல்ல பல எதிரிகளின் கவனத்தை ஈர்த்து விடவே, இவர் மறைந்து வாழவேண்டிய ஆபத்தான நிலை உருவாகியது. எனவே, வீட்டை விட்டுப் பிரான்சு நாட்டுக்குக் கப்பலேறினார். முதலில் ரோன் நகரம் தொடங்குமிடத்தில் காட்டில் வாழ்ந்தார். பின்னர், கார்ட் நதிக்கு அருகிலும், இறுதியாக நிம்ஸ் மறைமாவட்டத்திலும் வாழ்ந்தார். இவரது பல வருட ஏகாந்த வாழ்விலே இறையுடன் மட்டுமே உரையாட முடிந்தது. இவர் நிகழ்த்திய புதுமைகள் இவரது புகழைப் பிரான்ஸ் நாடு முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும்

## அருள்தந்தை எல்.கே. மரியதாசன் அடிகளார்



மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் மூத்த குருக்களில் ஒருவரான அருள்தந்தை எல்.கே. மரியதாசன் அடிகளார் குருத்துவ வாழ்வில் ஐம்பது ஆண்டுகளை நிறைத்துப் பொன்விழாக் காண்கிறார்.

1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட அடிகளார் அப்போதிருந்த திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பல பங்குகளிலும் பணிபுரிந்து, மறை மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பங்களித்தவர். தமக்கென்று தனித்துவமான கருத்துகளும், உறுதியான நிலைப்பாடும் கொண்டவர். அதுமட்டுமன்று, இளமையான தோற்றத்துக்குச் சொந்தக்காரர்.

பல்வேறு காரணங்களுக்காகவும் இவரது குருத்துவப் பொன்விழா நிகழ்வுகள் கடந்த ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி மட்டக்களப்பு புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெற்றன.

காலை 10.00 மணிக்கு நடைபெற்ற நன்றித் திருப்பலியில் மறைமாவட்ட ஆயர் பேருள்தந்தை யோசப் பொன்னையா அவர்களும், குருக்கள், துறவிகள், மற்றும் பொதுநிலையினர் உட்பட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து மேயர் மண்டபத்தில் நடைபெற்ற விருந்துபசார நிகழ்வில் பலரும் பங்குகொண்டு பொன்விழா நாயகருக்குத் தமது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டனர். பொன்விழா நாயகர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்திட இறையருள் நிறைவதாக!



பரப்ப வழிகோலியது. பிரான்சிய மன்னன் இவருக்கு உயர்வான மதிப்பளித்தான். என்றாலும், அவரது ஏகாந்த வாழ்வில் இருந்து அவரை வெற்றிகொள்ள முடியவில்லை. பல சீடர்களைத் தன்னோடு இணைத்துக்கொண்டு, பகிர்ந்து வாழச் செய்தார். பின் குருமடம் ஒன்றை உருவாக்கி, அங்கு மிகச் சிறந்த ஒழுக்கமுள்ள, கட்டுக்கோப்பான வாழ்வை ஏற்படுத்தினார். புனித பெனடிக்றின் ஆட்சிக் காலத்தில் அவரது பேராதரவைப் பெற்றுக்கொண்டார். 8ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அதாவது 724ம் வருடத்திலே இறையடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




முருங்கை மரத்தின் வேர், பட்டை, காய்கள், பூக்கள், இலைகள் அனைத்தும் மனித உடலுக்குத் தேவையானவை, மருத்துவ குணம் கொண்டவை.

பொதுவாக எல்லோரது காணிகளிலும் முருங்கை மரம் இருக்கும். அது அந்தக் காலம்! இப்போது ஆறுபேர்ச் காணியில் அடுக்குமாடி வீடு கட்டவேண்டிய காலம்! முருங்கை மரம் நட ஏது நிலம்! எந்தவித கவலையுமின்றி முருங் கைக் கிளைகளை, இலைகளை, மரத்தை வெட்டி எறிந்த காலம் போய் இப்போது கட்டு இருபது ரூபாவாக சந்தையில் வாங்க வேண்டிய நிலை!

முருங்கைக் கீரையில் விற்றமின் ஏ, பி மற்றும் உயிர்ச் சத்துகளுடன் புரதம், இரும்பு, சுண்ணாம் புச் சத்துகளும் ஏராளம் உள்ளன. குளிர்ச்சியைத் தரவல்லது.

உடல் வளர்ச்சிக்கும், வலிமைக்கும் ஏற்றது மட்டுமல்ல, நாடி நரம்புகளுக்கு வலுவூட்டும், ஆண்மையைப் பெருக்கும்.

முருங்கைக்காயின் மகத்துவத்தை அந்தக் காலத்தில் திரைப்படங்களில் பரப்பியவர் நடிகர் பாக்கியராஜ். அவரது பேச்சில் அப்படி, இப்படி' இருந்தாலும் விஷயம் என்னவோ உண்மைதான்.

முருங்கைக் கீரையோடு வேகவைத்த வேர்க் கடலையையும் (கச்சான் பருப்பு) கலந்து சமைத் துச் சாப்பிட்டு வர, விலை உயர்ந்த பருப்புகளில் உள்ள (பாதாம், பிஸ்தா) சத்துகளைவிட பல மடங்கு அதிக சத்துகளைப் பெறலாம்.

பித்தத்தைத் தணிக்கும் ஆற்றல் இதற் குண்டு. பித்த நோயுள்ளவர்கள் அடிக்கடி சமைத் துச் சாப்பிடலாம்! சிலருக்கு - அதிகமாகப் பெண் களுக்கு குரல்வளையில் வீக்கமும், வலியும் ஏற் படுவதுண்டு. தைரொய்ட் சுரப்பியில் ஏற்படும் குறைபாடுகளால் இது ஏற்படுகிறது. இதற்கு அறுவை சிகிச்சைதான் ஒரே வழி என்று ஆங்கில மருத்துவத்தில் வெட்டிக் கிழித்து விடுவார்கள். சிலருக்கு குரல் ஒலியும் மாறிப் போவதுண்டு. குரல் வீக்கம் உள்ளவர் முருங்கை இலையை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் வீக்கம் குறையும், வலியும் அகலும். இவ்வருத்தத்துக்கு எளிமையான மருந்துகள் ஹோமியோபதி மருத் துவத்திலும் உண்டு. அயோடியம், தைரோடியம், சைலீசியா, கல்கேரியாகார்ப், லைகோபோடியம் என்று பல மருந்துகள் உள்ளன. அவரவர்களுக் குரிய நோயின் தன்மைக்கும், குணம் குறிகளுக்கும் ஏற்ற மருந்துகளை மருத்துவரின் ஆலோசனை யோடு தொடர்ந்து எடுத்து வந்தால் நோய் போயே போய்விடும்.

நீரிழிவு நோய்க்கும் முருங்கைக் கீரை கைகண்ட மருந்து. தொடரந்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு கட்டுப்படும். இரத்தத்தில் சீனியின் அளவு குறையும்.

9ம் பக்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறுங்கதை - 08

# திருப்பம்

வீக்கேயெம்

அப்போதுதான் வரவுப் பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டு நிமிர்ந்தபோது, பஸ் சாரதி பூபாலன் கதவருகே நிற்பதைக் கவனித்தான் முரளி.

அவன் கையால் இவனை அழைக்கவும், இவன் அவனண்டை போய் நின்று ஏறிட்டான்,

"தம்பி, சோர்ட் லீவு போட்டிட்டு வந்தனான்..... எனக்கு அவசரமாய் ஒரு பேர்த் சேட்டிபிக்கற் வேணும்" என்று குழைந்தான் பூபாலன்.

விண்ணப்பப் பத்திரத்தை இவனிடம் நீட்டினான். இவனை வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்று மனதுள் நினைத்தவாறே வாங்கிக்கொண்டான் முரளி.

'கொஞ்சநேரம் வெளி வாங்கில இரும்" சொல்லிக்கொண்டே உள்ளே போனான். பதினைந்து நிமிட தாமதத்தில் வெளியே வந்து அவனை அழைத்துக்கொண்டே வெளியேறினான் முரளி.

"ரீ குடிப்போமா...?" பூபாலனின் கோரிக்கையைப் புறக்கணித்து பக்கவாட்டில் தலையசைத்துக்கொண்டே முன்னால் நடந்தான்.

அவன், இவனைப் பின்தொடர்ந்தான். வீதிக்கு வந்ததும், கையோடு கொண்டுவந்த என்வலப்பை பூபாலனிடம் நீட்டினான்.

திகைப்புடன் இவனைப் பார்த்தவன், கைநீட்டி வாங்கிக்கொண்டு பொக்கற்றிலிருந்து இருபது ரூபா நோட்டொன்றை எடுத்து இவனிடம் நீட்டினான்.

"அதை உள்ளை வையும்.... இதுக்காகவா நான் உமக்கு உதவி செய்தன்? இப்படியே நீர் வெவ்வேறு இடங்களுக்கு அலைய வேண்டி வரலாம்.... இனியாவது உத்தியோகத்தர்கள் எங்கு மறித்தாலும், நீர் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லத்தான் இந்த அவசர உதவி...!"

முற்றுப்புள்ளி வைத்தான் முரளி.

பூபாலன் வாயடைத்துப் போனான்.

வீதியென்றும் பாராமல் இருகரம் கூப்பி கும்பிடு போட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**ம**னிதன் வாழ்வில்
இன்பத்தைத் தரும் இறைவனே
துன்பத்தையும் தருகிறான்!
வாழ்வைத் தருபவனே கேட்டினையும்
அனுமதிக்கின்றான்!
வாழ்வை அனுபவித்து மகிழும்போது, மனிதன்
தன் பலத்தை, தன்னை – மெச்சி வாழ்கிறான்;
அதனால் துன்பங்கள் தரும் அனுபவத்தை
அவன் கற்க மறக்கின்றான்.
இறைவனை உணர மறுக்கின்றான்!
ஆனால், கல்லொன்று காலைப்
பதம் பார்க்கின்றபோது, ஒன்றில்
அம்மா என்கின்றான், இல்லையேல்
ஆண்டவனே என்றலறுகின்றான்.
சுற்றும் முற்றும் உதவிக்கு ஆள் பார்க்கின்றான்!
சற்று இதையிட்டு எண்ணிப் பார்க்கையில்,
இறைவன் தன்னை எண்ணி வாழவும்,
அடுத்தவரை ஏற்று வாழவுந்தான்
துன்பத்தைத் தருகின்றார் என்கின்ற அர்த்தம் புரியும்!
இன்பம் தரும் நலனைவிட
துன்பம் தரும் அனுபவம் மிகவும் பெரிது.



## 09 எண்ணிப்பார்க்கையில் ...

— ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம் —

"சீ..... கையைக் கீழை விடும்!"

அவன் பதிலுக்குக் காத்திருக்காமல் திரும்பி நடந்தான் முரளி.

மறுநாள் கச்சேரிக்குப் போகும் உரிய பேரூந்தைக் கோட்டை விட்டுவிட்டு அலுவலகத்துக்குப் பிந்தியே வந்து சேர்ந்தான் முரளி.

அலுவலக நண்பர்களிடையே ஒரே பரபரப்பு.

"என்னப்பா...., பூபாலனுக்கு வந்த மனமாற்றமென்ன....? இன்றைக்கு நிச்சயமாய் மழை வரத்தான் போகுது!" என்றொருவரும்,

"...... இந்தப் பகிடியைக் கேள் மச்சான் .... நான் சந்திக்குக்கிட்ட வந்திட்டன்.... ஓடி மறிச்சாலும் இவன் ஏத்தமாட்டான் எண்டு நினைக்க, பஸ் 'சிலோ' பண்ணுது. வேற யாரோ டிரைவராக்கும் எண்டு ஓடிவந்து ஏறினன் ....",

"உண்மையாய் மழை வரத்தான் போகுதப்பா!" என்று இன்னொருவரும் கதைத்தபோது மனதுக்கு இதமாக இருந்தது, முரளிக்கு. ● ● ●

**வீட்டு மருத்துவம் .....**

இரத்த அழுத்தம் மற்றும் கண் தொடர்பான நோய்களையும் இது குணமாக்க வல்லது.

குழந்தை பிறந்து பால் சுரப்பு இல்லாத தாய்மார்களுக்கு முருங்கைக் கீரையைச் சமைத்துச் சாப்பிடக் கொடுத்து வந்தால் பால் சுரப்பு மிகுதியாகும்.

சிலருக்கு வயிற்றுவலியுடன் வயிறு உப்புவதும் உண்டு. இதற்கு முருங்கைக் கீரைச் சாற்றுடன் உப்பு, வசம்புத் தூளைச் சேர்த்துக் குழைத்து வயிற்றின்மேல் பற்றாகப் போட வலியும் உப்புசமும் தணியும்.

முருங்கைப் பூக்களைச் சேகரித்து, சுத்தப்படுத்தி, அவித்துச் சாப்பிட்டு வந்தால் இதயம் வலிமை பெறும்.

முருங்கைக் காய்க்கு நமது உடலை என்றும் இளமையாக வைத்திருக்கும் சக்தி உண்டு. அதனால் அடிக்கடி காயையும் சாப்பிட்டு வாருங்கள்.

இறுதியாக, முருங்கைக் கீரையை அடிக்கடி உண்டு வந்தால் இருமல், குரல் கம்மல் நீங்கும். இடுப்புவலி தீரும். ஆஸ்மா கட்டுப்படும். கண்ணோய்கள், சொறி சிரங்கு நீங்கும். காது வலி அகலும், கொழுப்பைக் கரைக்கும். காமாலையைக் கட்டுப்படுத்தும், பற்கள் உறுதிப்படும்.

சரி வீட்டுக்கு வீடு முருங்கைத் தடியை நாட்டுங்கள். வைத்தியரே உங்கள் கூட இருப்பார்.

- ஆனந்தசித்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அதிகார நரகம்

இது புயல் சுமந்த பூமி
புதிதாய்ப் பிறந்தாலும்
புதிராய் மலர்ந்தாலும்
மலைக் குகைக்குள்
மல்லாக்கத் தூங்கும்
வௌவால்களாய்
தலைகீழ்த் தாளங்களால்
தவித்துப் போகும் மானிடங்கள்

வாசங்கள் நாற்றங்களாய்
வசந்தங்கள் கானல்களாய்
வாலறுந்த நரிகள்
நலம்பேசும் நாயகர்களாய்
நாடெங்கும் உலாக்கள்.

சூரியச் சூட்டிலே
சாதம் படைக்கலாம்
கோதுமை மாவும்
கேள்வரகுக் கூழும்
யாருக்கும் வேண்டாம்
கேக் சாப்பிடுங்கள்
புட்டிப் பாலூட்டுவது
போலித்தனமப்பா
தாய்ப்பாலே போதும்
அன்றேல்
பசு மடியைத் திருடிப்
பாலெடுத்தால் பாவமில்லை
கட்டிளம் சமூகம்
கடிதினில் படைக்கலாம்
உயர்த்திப் பேசினர்

என் கையில் கடித்த
நுளம்பைப் பிடித்தேன்
கருங்கற்சுவரில்
அதன் மூக்கைத் தேய்த்தேன்
மயானத்துப் பேயொன்று
மகிழ்வுடன் பார்த்தது.

நானும் நீயும் நண்பர்கள் என்றேன்
எனக்குத் தோழன் நீயல்லவே
அதோ பார்
மனிதம் பேசி மனிதரை அழிப்போர்
சமாதானம் பேசி
சவக்குழி தோண்டுவோர்
துப்பாக்கிகள் விற்போர்
துயரம் படைப்போர்
அவர்கள் என் நண்பர்கள்.

கோடரியொன்று கையிலெடுத்தேன்
விறகுக் கட்டையில் விமானம் செய்தேன்
செவ்வாய் சென்று சில பொழுதானும்
அமைதி காண அவாவினேன்
கோடரிக்கள்ளன், விறகுத் திருடன்
எங்கள் முப்பாட்டன் சொத்தாம்
செவ்வாய்க் கிரகத்தில்
அத்துமீறிக் குடியேற முயன்ற
அடாவடி மனிதன்
அடித்து நொருக்கி அம்மணமாக்கி
உயிர்மூச்சை மட்டும் அன்பளிப்பாக்கி
அடியேனை விட்டனர்
ஐயகோ, என்ன செய்வேன்
என்முகம் துடைக்க
எந்த வெரோணிக்காவும்
இங்கு வரவில்லையே!

– பைந்தமிழ்க்குமரன் டேவிட் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மனித உரிமை மீறல்கள்:**

இன்று மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்றவர்கள், மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனம் பிரகடனமாகி அறுபது வருடங்கள் கடந்த நிலையிலும் அது இன்னும் கனவாகவே இருக்கின்றது என்கிறார்கள். மனித உரிமை மீறல்கள் உலகின் அனைத்துப் பாகங்களிலும் சாதாரணமாக அரங்கேறிக்கொண்டுதான் இருக்கின்றன.

2009ஆம் ஆண்டு சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையின்படி தனிநபர்கள்,

81 நாடுகளில் சித்திரவதை மற்றும் துன்புறுத்தல்களுக்காளாகின்றார்கள்.

54 நாடுகளில் அநீதியாகக் குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கின்றார்கள்.

77 நாடுகளில் பேச்சுச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

இது தவிரவும் பெண்களும் பிள்ளைகளும் பல வழிக ளிலும் ஒடுக்கப்படுகின்றார்கள். பல நாடுகளில் பத்திரி கைச் சுதந்திரம் நசுக்கப்பட்டிருக்கின்றது. எதிர்ப்ப வர்கள் மௌனிக்கப்பட்டிருக்கின்றார்கள். என்ன தான் சிறு அளவிலான முன்னேற்றம் மனித உரிமை பேணலில் எட்டப்பட்டிருந்தாலும், அடக்கு முறைகள் பரவலாகவும், குறைவில்லாமலும் நிகழத் தான் செய்கின்றன.

ஆப்கானிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் பல்லாயிரம் மக்கள் தாக்குதல்களில் பலியாகியிருக்கின் றார்கள். பிரேசில் நாட்டில் பல நூற்றுக்கணக்கான வர்கள் பொலிசாரினால் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். உகண்டாவில் இன்றுவரை ஐந்து இலட்சத்துக்கும் மேற் பட்டவர்கள் அகதிகள் முகாம்களில் மட்டும் மரித்திருக் கின்றார்கள்.

வியட்நாமில் 75,000றக்கும் மேற்பட்ட போதைவஸ்துப் பாவனையாளர்கள் மற்றும் விபச்சாரிகள் நெரிசல் மிக்க 71 முகாம் களில் 'மிகவும் ஆபத்தானவர்கள்' என்று முத்திரையிடப்பட்டு, எயிட்ஸ் நோய்க்குக்கூட தக்க மருத்துவ உதவிகளின்றி அடைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

வட உகாண்டாவில் இருபது வருடங்களில் 20,000 சிறுவர்கள் (ஆண்களும், பெண்களுமாக) போராட்டங்களுக்கும் இராணுவ பாலியல் தேவைகளுக்குமாகத் தங்கள் குடும்பங்களிலிருந்து கடத்தப்பட்டிருக்கின்றார்கள். கினியா பிசௌவில் ஐந்து வயதான பிள்ளைகள் கூட கடத்தப்பட்டு தென் செனகல் பகுதிகளில் பஞ்சு உற்பத்தியில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள் அல்லது பிரதான நகரங்களில் பிச்சை எடுக்கும்படி வேலைக்கமர்த்தப்பட்டிருக்கின்றார் கள். கானாவில் ஐந்திற்கும் பதினான்கு வயதிற் கும் இடைப்பட்ட சிறுவர்கள் படிப்பு மற்றும் சிறந்த

- ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எதிர்காலம் கிடைக்கும் என்று ஏமாற்றப்பட்டு தற்போது ஆபத்தான மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து நாடுகளில் இருந்து கடத்திவரப்படும் இளம் பெண்கள் ஜப்பான் தேசத்தில் பாலியல் தொழிலில் அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். பிலிப்பைன்சில் 60,000 க்கும் அதிகமான சிறுபராய பாலியல் தொழிலாளிகள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் தாபனம் மதிப்பிட்டிருக்கின்றது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள புள்ளி விபரப்படி, வருடாந்தம் ஆறு இலட்சம் முதல் எட்டரை இலட்சம் வரையிலானோர் (அதிகமாகப் பெண்களும் குழந்தைகளும்) எல்லைகள் தாண்டி கடத்தப்படுகின்றார்கள். குறிப்பாக ஈராக்கில் இந்த அவலம் தொடர்கிறது. இவர்கள் சென்று சேரும் அநேக உலக நாடுகளில் கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இப்படியானவர்களுக்குக் கிஞ்சித்தும் இரக்கம் காட்டாமல், மீள நாடு கடத்தல், மற்றும் போதிய உதவிகள் வழங்கப்படாதிருத்தல் போன்ற கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. டொமினிக்கன் குடியரசில் மனிதக் கடத்தலின்போது மூச்சுத் திணறி 25 பேருக்குமதிகமாக மாண்டிருந்தும் இதில் ஈடுபட்டதாகக் கருதப்படும் 4 பேருக்கு சிறு அளவிலான தண்டனையே வழங்கப்பட்டிருக்கின்றது. சோமாலியாவில் 1.400 சோமாலியர்களும், எத்தியோப்பியர்களும் இவ்வாறு படகில் கடத்தப்படும் போது கடலில் மூழ்கி மாண்டுள்ளனர். அவுஸ்திரேலியா, இத்தாலி நோக்கிச் சென்ற ஏராளமானோர் இதுபோலவே தம்முயிரைக் கடலுக்கிரையாக்கிக் கொண்ட வரலாறு நமக்கொன்றும் புதிதல்ல.

2008 ஆம் ஆண்டளவில் அமெரிக்கா தனது குவான்டனமோகுடா தடுப்பு முகாமில் 270ற்கும் மேலான தொகையினரைத் தடுத்து வைத்திருந்த வரலாறு இன்றும் நமக்கு ஞாபகம் உள்ளது. டர்புர், கொங்கொ ஜனநாயகக் குடியரசு போன்ற நாடுகளிலும் இவ்வாறான நிலைமை அவதானிக்கப்பட்டது.



மிகச் சமீபத்தில் அமெரிக்கர்களது மட்டுமல்ல வெளிநாட்டுத் தலைவர்களுடைய தொலைபேசி உரையாடல்களைக் கூட அமெரிக்கா ஒட்டுக்கேட்ட நிகழ்ச்சிகள் வெளியாகியதை நாம் இன்னும் பசுமையாக நினைவில் கொண்டுள்ளோம்.

மியன்மார், அல்ஜீரியா, கென்யா, வட உகாண்டா போன்ற நாடுகளில் நகர்வுச் சுதந்திரம் மறுக்கப்பட்ட பல இலட்சக்கணக்கானோர் தடுப்பு முகாம்களில் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால். இன்று நம் நாட்டில் மட்டுமல்ல புகலிடம் தேடிச் சென்ற தமிழ் நாட்டிலும் முகாம்களை விட்டு வெளியேற முடியாமல் திறந்த சிறைச்சாலைகளுக்குள் அடைபட்டு இலங்கைத் தமிழ்க் குடும்பங்கள் வாடுகின்றன.

மியன்மாரில் மத உரிமை வேண்டிப் போராட்டத்திலீடுபட்ட புத்த பிக்குகள் இரும்புக் கரம் கொண்டு நசுக்கப்பட்டார்கள். விகாரைகள் சேதமாக்கப்பட்டன. போராட்டத்திலீடுபட்டவர்களது குடும்ப அங்கத்தவர்களும், சமயங்களில் அவர்களது நண்பர்களும் கைது செய்யப்பட்டனர், பணயக் கைதிகளாக்கப்பட்டனர், தடுத்து வைக்கப்பட்டனர். ப.்.லுன் கொங் மார்க்கத்தைப் பின்பற்றியவர்களும், அரசாங்கம் அனுமதிக்காத திருச்சபையைச் சேர்ந்தவர்களும் சீன தேசத்தில் சித்திரவதைக்கும், துன்புறுத்தலுக்குமுள்ளாவது தொடர்கதையாகும். கஸக்கஸ்தான் 'ஹரே கிருஷ்ணா' வழிபாட்டுக்காரர்களின் வீடுகள் நொருக்கப்பட்டன. பாகிஸ்தானில் மற்றும் இந்தியாவில் கிறீஸ்தவக் கோயில்கள் சேதமாக்கப்பட்டன. ஆலயங்கள் மீது வழிபாட்டு வேளைகளில் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சூடான், எத்தியோப்பியா, சோமாலியா, கொங்கோ, ரஷ்யா, ஈராக், இலங்கை போன்ற நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் மறுக்கப்பட்டு பத்திரிகையாளர் கடத்தப்பட்ட, கொலைசெய்யப்பட்ட சம்பவங்கள், அச்சகங்கள் தாக்கப்பட்ட நிகழ்வுகள் நடந்தேறின. இலங்கையில் பல மசூதிகள், சைவக் கோயில்கள், திருச் சுரூபங்கள் தகர்த்தெறியப்படும் சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளன.

மனித உரிமைகள் இருப்பது எந்தளவுக்கு உண்மையோ, அதற்கு எதிராக மீறல்களும் நடப்பது உண்மையே! மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உரிமைப் பிரகடனமானது உலகின் பல நாடுக ளாலும் ஏற்கப்பட்டு பேணப்படுவதாக இருந்தாலும், உண்மை நிலைவரம் அந்தச் சாசனத்தின் கனவுக ளுக்கு முற்றிலும் மாறானதாகவே காணப்படுகின் றது.

சிலருக்கு மனித உரிமைகள் என்பது எட்டாத கனியாகவே உள்ளன. சருவதேச மனித உரிமைச் சட்டங்களை அமுலாக்குவது பல சந்தர்ப் பங்களில் நடைமுறைக்குச் சிரமமானதொன்றாக வும், பெரும் நிதிச் செலவை உள்ளடக்கியதாகவும் அமைகின்றது. இந்தச் சர்வதேசச் சட்டங்கள் பல தடவைகளில் மீறல்களுக்கு எதிரானவையாக அமைந்து பலருக்குப் பாதுகாப்பைத் தேடித் தந்தா லும், பெரும்பாலானோரைப் பாதுகாக்க அவை வலு வின்றியே இருக்கின்றன. பாரபட்சம் உலகில் எங்கும் உள்ளது. தம் எண்ணத்தை வெளிப்படுத்தியதற்கா கச் சிறையில் வாடும் ஆயிரக்கணக்கானோர் இன்னும் அதேநிலையில்! வழக்குகள் இல்லை, தனிமைப் படுத்தப்பட்டவர்களாய் - அதிலும் ஜனநாயக நாடுகள் என்பவற்றில்!!

இதில் நமக்கும் பங்களிப்பு இருக்கின்றது. நமது அறியாமை, பயம், பாதுகாப்பின்மை காரண மாக நம் அண்டை வீட்டை பயங்கரம் அணுகிய போது பேசாதிருந்து விட்டோம். நம் வீட்டை அதே பயங்கரம் அதிரச் செய்தபோது நமக்கென குரல் கொடுக்க யாருமில்லை. எனவே, நம் கவனத்தை இந்த மனித உரிமைகள் பேரில் திருப்புவதும் அதற்காகக் குரல் கொடுப்பதும் அவசியமானது.

இறுதியாக, இந்தத் தொடரில் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்சில் தொடர்பாகவும் சற்றே பார்ப்பது உசிதமான ஒரு செயலாக இருக்கும். நம் நாட்டைப் பொறுத்தவரையில் இங்கு நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர இலங்கை அரசுக்கு பல உலக நாடுகள் உதவின. இன்று அந்த நாடுகளில் சில அதற்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டி ருக்கின்றன. 'இதற்கெல்லாம் பயப்படுகின்றவன் நானல்ல' என்று மார் தட்டிக்கொண்டாலும் ஜெனிவா மனித உரிமைகள் கவுன்சில் என்றாலே ஒரு குலை நடுக்கம் இருக்கவே செய்கின்றது. நட்பு நாடுகளின் தயவில் தனக்கெதிரான குற்றச்சாட்டுகளிலிருந்து தான் தப்பிக்கொள்ள முடியும் என்று அது நம்பினா லும் அந்தக் கவுன்சிலின் அமர்வுகள் முடியும் வரை அது உயிரைக் கையில் பிடித்தபடியே இருக்கும் என்பதில் இரண்டாம் கருத்தில்லை! அதேவேளை புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தமது போராட்டத் தினால், மற்றும் சனல் - 4 இன் தொடர் ஆவணங்க ளின் வெளியீட்டினால் அங்கத்துவ நாடுகள் தமது ஆதரவை மீளப்பெற வழியும் ஏற்படலாம். சமீபத்தில் இசைப்பிரியா தொடர்பான சனல் - 4 இன் ஆவணப் படம் உலக மட்டத்தில் இலங்கைக்கெதிரான கருத்தை வலுப்பெற உதவியிருந்தமையை குறிப்பிட் டுச் சொல்ல முடியும்.

தொடரும் ....

## ஒருமைப்பாட்டுணர்வுக் கோட்பாடு தேவை!

உலகில் நிலவும் ஏழ்மை, சுரண்டல் மற்றும் மோதல்களை ஒழிப்பதற்குச் சிறந்த வழி ஒருமைப்பாட்டுணர்வுக் கோட்பாட்டை பயன் படுத்துவதே என்று வத்திக்கான் உயரதிகாரி பேராயர் சில்வானோ தொமாசி ஐ.நா.கூட்டத் தில் கூறினார்.




மனிதர்கள் அனுபவிக்கும் வெப்ப நிலை மாற்றம் நோய்கள் போன்ற துன்பங்கள் தவிர, சுயநல மனிதரின் பேராசையால், அடிமைத்தனத்தின் பல்வேறு வடிவங்களில் இலட்சக்கணக்கான சிறாரும், பெண்களும், ஆண்களும் மனிதமற்ற சூழல்களில் துன்புறுவதையும் பேராயர் சுட்டிக் காட்டினார்.


போர் அல்லது, அடக்கு முறைகளுக்குப் பயந்து தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிய மக்களின் எண்ணிக்கை 2013ம் ஆண்டில் 5 கோடியே 12 இலட்சம் எனவும் இவ் எண்ணிக்கை அதற்கு முந்தைய ஆண்டை விட 60 இலட்சம் அதிகம் எனவும் ஐ.நா. புலம் பெயர்வோர் நிறுவனம் கூறுகிறது.

அதேவேளை கடல் பகுதிகளில் குவிந்து வரும் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் கடல்களின் சுற்றுச் சூழல் அமைப்புக்கு ஆண்டு தோறும் 1300 கோடி டொலர் இழப்பை ஏற்படுத்துகின்றன என்று ஐ.நா. சுற்றுச் சூழல் அமைப்பின் ஆண்டறிக்கை கூறுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## போர்த்துக்கேயர் காலம் (1505 1657)


### போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கான காரணங்கள்

ஆரம்பகாலம் தொட்டு கீழைத்தேய வர்த்தகத்தின் அனைத்து உரிமைகளும், முஸ்லிம்களின் கைகளிலேயே இருந்து வந்தன. இவர்கள் கீழைத்தேய நாடுகளுடன் வர்த்தகம் செய்து தம் நாடுகளின் வருவாயினைப் பெருக்கிக் கொண்டு வந்தனர். செல்வம் கொழிக்கும் நாடுகளாக்கினர். 8ம் நூற்றாண்டில் அராபியரால் கைப்பற்றப்பட்டு அடிமையாக்கப்பட்ட இஸ்பானிய குடா நாட்டின் ஒரு சிறிய பகுதியாகவிருந்த போர்த்துக்கல் கி.பி 1095ல் முஸ்லிம்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு ஒரு தனி வல்லரசாக உருவாகி, வலிமை பெற்று வளர்ந்தது. இரு நூற்றாண்டுகள் தொடர்ச்சியாக இடம்பெற்ற போரினால் போர்த்துக்கேயர் முஸ்லிம்களை முற்றாகத் தம் நாட்டிலிருந்து விரட்டி, கீழைத்தேய நாடுகளுக்கான கடல்வழிப் பாதை ஒன்றை கண்டுபிடிக்க அயராது உழைத்தனர். இறுதியாக, 1497ல் போர்த்துக்கேய அரசன், வாஸ்கொடகாமா தலைமையில் அனுப்பப்பட்ட கப்பற் படைகள் இந்திய மண்ணில் கல்கத்தா என்னும் இடத்தில் 1498.05.22ல் முதல் முறையாகக் காலடி எடுத்து வைத்தனர்.

இந்தியாவில் தம் நிலையினைப் படிப்படியாக உறுதிப்படுத்திய போர்த்துக்கல் வெகு விரைவில் இந்திய அதிகாரியாக மாறியது. கீழைத்தேய நாடுகளுக்குக் கடல் வழியாகப் பாதையைக் கண்டு பிடித்ததன் மூலம் இவ்வளவு காலமும் முஸ்லிம்களும், இத்தாலியரும் அனுபவித்து வந்த வர்த்தக ஆதாயத்தையும், வர்த்தக ஏகபோக உரிமையையும் தமதாக்கிக் கொண்டது. தம்மைக் காலங்காலமாய்க் கொடுமைப் படுத்திய அராபியரைத் தாங்களும் கொடுமைப் படுத்தி, முஸ்லிம்களின் கையிலிருந்த இந்திய நகரங்களையும் வர்த்தகத்தையும் கைப்பற்றினர்.

பொன், வெள்ளி, வாசனைத் திரவியங்கள் மேலிருந்த பற்றும், முஸ்லிம்களின் மேலிருந்த வெறுப்பும், ஆத்திரமுமே அவர்களுக்கு உற்சாகம் கொடுத்தது.

15ம், 16ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மத மறுமலர்ச்சியும் இதற்கு ஒரு காரணமாக அமைந்தது. தொடக்கம் முதலே முஸ்லிம்களின் கொடிய ஆட்சியின் கீழ் உருவாகிய போர்த்துக்கேயருக்கு தங்கள் சொந்த விடுதலைக்காகப் போராடுவது,



இறைவனுக்காகவும் அவரது சொந்தத் திருச்சபைக்காகவும் போராடுவதாய்த் தென்பட்டது. தம் பேரரசுக்காய்ப் போராடுவதெனக் கருதினர். இறைமகிமைக்காகவும், தம் அரசின் நலனுக்காகவும், ஆன்ம இரட்சணியத்துக்காகவும் முஸ்லிம் மதத்திற்கெதிராக, வர்த்தக வருவாயை அதிகரிக்க, பேரரசின் நிலப்பரப்பை விஸ்தரிக்க திருச்சபையின் வளர்ச்சிக்கெல்லாம் போராடி உழைப்பதெல்லாம் ஒன்றே என்பதே இவர்கள் கொள்கையாகும். ஒரு போர்த்துக்கேய வரலாற்றாசிரியரின் கூற்றுப்படி ஆன்மீக அதிகாரத்தையும் இலௌகீக அதிகாரத்தையும் ஒன்றில்லாமல் ஒன்றைச் செயல்படுத்த முடியாத அளவிற்கு ஒருங்கிணைப்பதே அவர்களின் கீழைத்தேய படையெடுப்பின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலை விளையாட்டுப் போட்டிகளும் ஒலிம்பிக் விளையாட்டும்

சென்ற இதழ்த் தொடர்ச்சி .....

அருட்திரு கலாநிதி S.A.I. மத்தியு S.L.E.A.S - I



தேர்வுத் தினத்தன்று ஒரு விளையாட்டு வீரன் உடல் நிலை சரியின்றி இருக்கலாம், உணவு நிலை பாதிக்கப்பட்டிருக்கலாம், இவை தெரிவுநிலையைத் தடங்கல் செய்திருக்கலாம். ஒரு மாணவனின் வீட்டுப்பின்னணி, வீட்டிற்கும் பாடசாலைக்கும் உள்ள தூரம், மாணவன் பாடசாலைக்கு வருகை தர எடுக்கும் நேரம் என்பன கவனத்தில் கொள்ளப்படவேண்டும். ஓர் ஈட்டியை (Javelin) மட்டுமே வைத்துக் கொண்டு, பாடசாலை சகல மட்டத்தினருக்கும் பயிற்சியளிக்க முடியாது. மாற்று வழி கண்டுபிடிக்கப்பட வேண்டும். பயிற்சிகளுக்குத் தடியைப் பயன்படுத்தலாம். அதிபர்களுக்கு மாற்றுச் சிந்தனை அவசியம். புத்தாக்கச் சிந்தனைகள் வேண்டும். அதிபர்கள் தொடர்ந்தேர்ச்சியான ஊக்கத்தை தம் உள்ளத்தில் கொண்டிருக்க வேண்டும். அதற்கேற்ற சூழ் நிலைகளை உருவாக்கிக் கொடுக்க கல்விக் காரியாலயங்கள் முன்வர வேண்டும். விளையாட்டுப் போட்டிக்கு முதல் நாள் இல்லங்களுக்கான தற்காலிக வீடுகளை அமைக்கும் நடைமுறை உண்டு. அதற்குப் புள்ளி வழங்கும் திட்டமும் உண்டு. அதற்கான இல்லங்களை அமைக்கும் பணிகளை மாணவர்கள், அவர்கள் ஓய்வுபெறும் நேரத்தில், இரவிரவாகச் செய்கின்றனர். இதனால் அவர்களின் முக்கிய விடயங்களுக்கு இடம் கொடுக்கப்படாமல் இருப்பதுடன் அவர்கள் உடற் சோர்வடைகின்றனர். இறுதியில் இல்லங்கள் பெற்றுக்கெண்ட இடத்திற் கேற்ப புள்ளிகள் வழங்கப்படாமல், புள்ளிகள் அறிவிக்கப்படாமல் உள்ளங்கள் மனச் சோர்வடைந்து குரோத மனப்பான்மை அடைவதைக் காணலாம். இதனால் அனுகூலமன்றி பிரதிகூலமே எற்படுகின்றது.

புதிய மாணவர்களை இல்லங்களுக்குப் பதிவு செய்யும் போது அவர்களது விளையாட்டுத்துறை சார்ந்த விருப்பு கவனத்தில் கொள்ளப் பட வேண்டும். அவர்கள் சமமான முறையில் இல்லங்களுக்குப் பகிர்ந் தளிக்கப்பட வேண்டும். விளையாட்டில் பங்குபற்றும் மாணவர்களுக்கு விஞ்ஞான அடிப்படையில் உளத்தேவை உள்ளதா என கண்டறியப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேலை நாட்டு மிஷனரிமார் கொணர்ந்த பாடசாலை விளையாட்டு நிகழ்ச்சி நிரலில் கௌரவ வைத்தியர்களும் டைம் கீப்பர்ஸ் என்ற நேரக் கணிப்பாளர்களும் உள்வாங்கப்படு கின்றனர். தற்போது பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்போது வைத்தியர்கள் இருப்பதில்லை. இது பொதுவான கண்கூடு. விளையாட்டுப் போட்டி இல்லங்களுக்கு வருகை தரும் நடுவர்கள் முதலுதவிப் பெட்டி உள்ளதா என்பதை மட்டும் அவதானிக்கின்றனர். விளையாட்டு வீரர்களுக்கேற்படும் காயம், இதயத் துடிப்புகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வைத்தியப் பயிற்சி பெற்றவர்கள் இருக்க வேண்டும். டைம் கீப்பர் ஒரு போட்டி முடிவிற்கு எடுக்கும் நேரத்தைக் கணிப்பது அவசியம். அது நடைபெறுவது இல்லை.

விளையாட்டின் ஆரம்பத்தில் ஒலிம்பிக் தீபம் கொண்டுவரப்பட்டு விளையாட்டு மத்தி யஸ்தர்கள், காரியாலய அதிகாரிகள், வீர வீராங் கனைகளை, 'ஒழுங்கு முறைப்படி விளையாடு வோம்' என பிரமாணம் செய்விக்கின்றனர். ஆனால், ஆள்மாறாட்டம், உரிய புள்ளிகள் வழங் காமல் இருப்பது என்பன தெரியவருகின்றன. "எங்கே சத்தியம்?"

விளையாட்டும் விளையாட்டுப் போட்டி நிர்வாகமும் கலைத் தன்மைகள் கொண்டது. உதாரணத்திற்குப் பரத நாட்டியம் இறைவனுக்கு நர்த்தகி தன்னை அளிக்கும் கலையாகும். சிங்கள பௌத்த நடனங்கள் தம் உடலை வாட்டி இறைவனுக்கு ஆடும் கலையாகும். அக் கலையை இறைவனுக்கு அர்ப்பணிக்கச் செய்யப்படுவது எனக் கூறுகின்றனர். இந்து சமயக் கருத்துகள் சிவபெருமானே தில்லையில் நடனமாடுவதாக ஒரு தத்துவத்தை முன்வைத் துள்ளன. யோகாசனமும் ஓர் உடற் கூற்றுக் கலையே. நுண்கலைகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் உடற்கலைகளுக்குக் கொடுக் கப்படுவதில்லை. பாடசாலைகளில் கலைக ளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். பேச்சு, சித்திரம், நகைச்சுவை போன்ற கலை களுக்கும் உயரம், நீளம் பாய்தல் போன்ற கலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.


விளையாட்டுப் போட்டிகளில் இல்லங் கள் தத்தம் கொடிகளுக்கு முக்கியத்துவம ளிப்பது அவசியம். பரிசு பெறும் வீரர்களுக்குத் தலைவர்கள் தம் கொடியைக் கொண்டு செல்வது இல்ல உணர்வை வெளிக்காட்டும். பரிசு பெறும் பிள்ளைகள் சீராக உடுத்துக் கொள்ள வேண்டும்.

– தொடரும் ......

## இறைவனடியில் 31 தினங்கள்

"நல்வாழ்க்கை சில நாட்களே நீடிக்கும்
நற்பெயர் என்றென்றும் நிலைக்கும்"
சீராக் 41:13

அன்னை மடியில் 01 04 1932



இறைவன் அடியில் 28 07 2014

**அமரர் திரு. முருகப்பன் சிதம்பரி அன்டனி**

என்றும் வாழும் தந்தாய்!
எங்கள் ஆன்ம காயங்களைக் குணமாக்க
நமதாண்டவர் இயேசுக்கிறீஸ்துவின்
திருக்காயங்களை உமக்கு
ஒப்புக்கொடுக்கின்றோம்.

என் இயேசுவே! உமது திருக்காயங்களின்
பேறுபலன்கள் வழியாக ஆன்மாக்களை மன்னித்து
இரக்கம் காட்டியருளும்.

கல்லறையில் கண்மூடித் துயில்கொள்ளும்
தந்தைக்கு அஞ்சலி செலுத்தும் குடும்பத்தினர்

72/28, ஞானசூரியம் சதுக்கம்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**தொண்டனின் சில நிமிடங்களுக்காக இன்று நாம் சந்திப்பது, அருளப்பு மாஸ்டர் என்று அழைக்கப்படும் தம்பியப்பா அழகையா அவர்களை. குருக்கள் மடம் என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தற்போது தனது மகள், மருமகன், மனைவி, பேரப்பிள்ளைகளுடன் மட்டக்களப்பு வன்னியார் வீதியில் உள்ள இல்லத்தில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கின்றார். இவரைத் தொண்டனுக்காகப் பேட்டியெடுக்க வேண்டும் என்று எமக்கு ஆலோசனை கூறியவர் எந்திரி ஜெயக்குமார் அவர்கள்.**





# தொண்டனின் சில நிமிடங்கள்....!

- அழியோன் -

அருளப்பு ஐயா அவர்களை ஒரு நண்பகல் வேளையில் எவ்வித முன்னறிவித்தலுமின்றி சந்தித்தோம்: அவரும் பேட்டிக்காக உடன் சம்மதம் தெரிவித்தார். கண்கள் இரண்டும் குளுக்கோமாவினால் பாதிக்கப்பட்டிருந்தும் ஆண்டுகள் சகலத்தையும், சம்பவங்கள் அனைத்தையும் கோர்வையாக எடுத்துக் கூறியமை ஆச்சரியமாக இருந்தது.

இரண்டு ஆண் பிள்ளைகளையும், நான்கு பெண் பிள்ளைகளையும் கொண்ட குடும்பத்தில் மூத்த மகனாக 1927ம் ஆண்டில் குருக்கள்மடம் என்னும் இடத்தில் இவர் பிறந்தார். தகப்பனார் சிறு வியாபாரம் செய்யும் ஒருவர். குருக்கள்மடம் மெதடிஸ்த பாடசாலையில் 5ம் வகுப்பு வரை கற்று முடித்த பின் (1932-1936), மட்டக்களப்பு புனித செபஸ்தியார் பாடசாலையில் எஸ்.எஸ்.சி. வரை படித்தார். மாலைவேளைகளில் தச்சுவேலையும் பயின்றார். எஸ்.எஸ்.சி. படிப்பு முடிந்த பின் ஒரு வருடம், கரடியனாறு விவசாயப் பண்ணைப் பாடசாலையில் பயிற்சி பெற்றார். 1947 தொடக்கம் 1950ம் ஆண்டுவரை கல்லாறு அருளானந்தர் ஆலயத்தில் உபதேசியாராகக் கடமை புரிந்த பின் மூதூர் புனித. அந்தோனியார் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். ஒரு வருடப் பணியின் பின்னர் 1951-1952 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றார்.

அதன்பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியராக கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தமிழ்ப் பாடசாலையிலும் (1953 ஜனவரி - ஆகஸ்ட்), பின்னர் திருகோணமலை புனித.சூசையப்பர் தமிழ்ப் பாடசாலையிலும் (1953 ஆகஸ்ட் - 1957 ஆகஸ்ட்), தொடர்ந்து (1957 செப்டெம்பர் - 1958 டிசம்பர்) தாண்டவன்வெளி கிளெனி தமிழ்ப் பாடசாலையிலும் (தற்போது ஜோசவ்வாஸ் வித்தியாலயம்) 1959 - 1960 காலப் பகுதியில் புளியடிக்குடா புனித. செபஸ்தியார் பாடசாலையிலும் போதித்தார். 1960ம் ஆண்டு மிஷனரிப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

அதன்பின்னர் 1961-1967 வரை தேற்றாத்தீவு றோமன் கத்தோலிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகவும், 1968 ஜனவரி - 1968 மார்ச் வரை மாத்தளை மந்தண்டாவளை தமிழ்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும், பின்னர் 1971 ஜனவரி வரை மாத்தளை பலாப்பத்வெவ தமிழ்ப் பாடசாலையின் தலைமையாசிரியராகவும் கடமையாற்றியபின் 1971 பெப்ரவரி தொடக்கம் 1983 டிசம்பர் வரை அம்பிளாந்துறை றோ.க. வித்தியாலய அதிபராகவும் இறுதியாக 1984 ஜனவரி தொடக்கம் யூன் மாதம் வரை களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

"குருக்கள்மடம் முற்றிலுமாகப் பாரம் பரிய சைவக் கிராமமாக இருந்தபோதும் எப்படிக் கத்தோலிக்க தேவாலயம், கத்தோலிக்க குடும் பங்கள் உண்டாயின....?" என்று அருளப்பு ஐயாவிடம் கேட்டோம்.

ஐயாவின் 16ம் வயதில் அவருடைய தாயார் காலமாகி விட்டார்; அவரின் மறைவின் மூன்றாம் மாதம் தகப்பனாரும் மரணித்து விட்டார். பின்னர் பாட்டியின் அரவணைப்பில் கஷ்டப்பட்டு வாழ்ந்தபோது வீரகத்திப்பிள்ளை என்னும் ஆசிரியரின் உதவியுடன் அப்போ தைய தாளங்குடா பங்குத்தந்தை 'கொப்பனட்' சுவாமிகளின் ஆதரவால் புனித.செபஸ்தியார் பாடசாலையில் ஆண் பிள்ளைகள் இருவரும், தங்கை புனித திரேசாள் பாடசாலையிலும் அனுமதிக்கப்பட்டு விடுதியில் தங்கவைக்கப் பட்டுப் படிப்பிக்கப்பட்டனர்.

இக்காலகட்டத்தில் சகோதரர்கள் அறுவரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட னர். எனவே குருக்கள்மடத்தில் ஆறு கத்தோ லிக்க மக்கள் முதன் முதலில் உள்வாங்கப் பட்டனர்.

ஆரம்பகாலத்தில் வெற்றிலை வியா பாரிகள் தீப்பந்தம் கொழுத்திக்கொண்டு மட்டக்களப்பிற்கு நடந்துவருவார்கள். அவர்க ளுடன் சேர்ந்தே தாளங்குடாவிற்கு பூசைக்கு செல்வது இவர்களின் வழக்கம். வளர்ந்த பின்னர் குருக்கள்மடத்தில் வழிபாட்டிடம் தேவையென்று உணரப்பட்டது. ஊர் மக்கள் எல்லாம் உறவினர்கள்; எப்படிக் கோவில் கட்டுவது என்ற ஆற்றாமையும் பயமும் அருளப்பு என்ற இளைஞனிடம் உண்டானது.

இதற்கிடையில் தனக்கு ஒரு 'தரிசனம்' கிடைத்ததாக அருளப்பு ஐயா குறிப்பிடுகின் றார். தான் நித்திரையில் இருந்தபோது ஒரு பெண்குரல் தன்னிடம் உரையாடியதாக அவர் சொல்கிறார். வழிபாட்டிற்காக ஓர் இடம் ஆயத் தம் செய்யும்படியாகவும், அதற்கான உதவிகள் கிடைக்கும் என்றும் அக்குரல் கூறியுள்ளது; "நீங்கள் யார்?" என்று கேட்டபோது "லூர்த்து அன்னை" என்று பதில் கிடைத்ததாம். இவ் வுரையாடல் தொடர்ந்து சில காலம் நீடித்த தாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

முதல் உரையாடல் முடிந்து மறுநாள் தனது உறவினரான 'மயில்வாகனம் கிளாக்கர்' என்பவர் வலியத் தேடிவந்து 'உங்களுக்கு வழிபட இடமொன்று தேவையல்லவா....?" என்று கேட்டுள்ளார். தனது காணித் துண்டொன் றைத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

'சைவ மக்களின் எதிர்ப்பு வந்துவிடக் கூடாது' என்ற எச்சரிக்கையில் ஊர்மக்களிடம் (உறவினர்கள்தான்) பணம் சேகரித்திருக் கின்றார் அருளப்பு ஐயா. மொத்தமாக 161 ரூபா 50 சதம் சேர்ந்தது. 'ஊர் மக்களின் ஆதரவு உற்சாகம் தந்தது. மயில்வாகனம் கிளாக்கர் காட்டிய ஓர் ஏக்கர் காணியில் 'சிறு குடில்' வைத்து வழிபாடுகள் செய்தோம். வீதிப் பக்கமாக உள்ள மரங்களை வெட்டி விடாமல் மறைப்பாக வைத்துக்கொண்டோம்" என்கிறார் ஐயா.

இதற்கிடையில் தேற்றாத்தீவிலும் ஆலயம் ஒன்று உருவானது. குருக்கள்மடம் வழி பாட்டிடத்தில் லூர்த்து அன்னையின் படம் ஒன்றை வரைந்து வைத்திருந்திருக்கிறார்கள். தேற்றாத்தீவு பங்குத்தந்தை 'நோபட்' சுவாமிக ளுடன் ஆயர் கிளனி ஆண்டகையைச் சந்தித் தோம். ஆயர் அவர்கள் ஆயிரம் ரூபாவைத் தந்தார்கள். அதைக்கொண்டு காணிக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மட்டக்களப்பிலிருந்து இயேசு சபைக்கு



## இரு புதிய குரு!

இயேசு சபையைச் சேர்ந்த திருத்தொண்டரான றொஷான் சுவக்கின் அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் 16ம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

மட்டக்களப்பு தூய மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற திருநிலைப்படுத்தும் திருச்சடங்கை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருள்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை நிகழ்த்தினார்.

இலங்கை இயேசுசபைத் தலைவர் அருள்தந்தை ஜெயராஜ் இராசையா உட்பட பெருந்திரளான குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மறுநாள் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு புதிய குரு தனது முதல் நன்றித் திருப்பலியை இருதயபுரம் திருஇருதயநாதர் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார்.


அன்புப் பணிபுரிய அடியெடுத்து வைத்துள்ள புதிய குருவுக்கு நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பணத்தைக் கொடுத்து உறுதி எழுதிக் கொண்டோம்" என்றும் ஐயா குறிப்பிட்டார்கள்.

ஐயா அவர்களின் ஆசைப்படி ஆலயத்திற்கு 'அசிசி' ஆலயம் என்று பெயரிடப்பட்டது. 1961ம் ஆண்டு செப்டம்பர் 4ம் திகதி 50'x20' யில் அரைச் சுவருடன் ஆலயம் மீள அமைக்கப் பட்டது.

இடையில் சில எதிர்ப்பு களும் உருவாகின; எனினும் அனைத்தும் சரி செய்யப்பட்டன.

இதற்கிடையில் குருக்கள் மடத்திற்கு அருட்சகோதரர்களை கொண்டு வருவதற்கும் தானே முன்னின்று உழைத்ததாகவும் அருளப்பு ஐயா அவர்கள் குறிப்பிட்டார்கள்.




**ஈற்றில் அவருக்குத் தொண்டன் சார்பில் நன்றிகூறி விடைபெற்றுக் கொண்டோம்....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media







பாட்டி – பேத்தி பாசத்திற்கு 'பூவே பூச்சூடவா', தந்தை – மகன் அன்பிற்கு 'தவமாய் தவமிருந்து'; அந்த வரிசையில் இப்போது தாத்தா – பேரன் பிணைப்பைச் சொல்ல வந்திருக்கும் படந்தான் இந்த **மஞ்சப்பை.**

ராஜ்கிரணை மட்டுமே மனதில் வைத்து உருவாக்கப்பட்ட படமே இந்த மஞ்சப்பை. சின்ன வயசிலேயே தாய் தந்தையை இழந்த விமலை, வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்குகிறார் தாத்தா ராஜ்கிரண். பெரியவனாகும் விமல், சென்னையில் ஐடி கம்பெனியில் வேலைக்குச் சேர்கிறார். அமெரிக்காவுக்குப் போக வேண்டும் என்று தீராத ஆர்வம் கொண்ட விமலுக்கு, அதற்கான வாய்ப்பும் கிடைக்கிறது. மூன்று மாதங்களுக்குள் அமெரிக்கா போகவிருக்கும் அவர், தன்னை வளர்த்து ஆளாக்கிய ராஜ்கிரணை அதுவரை தன்னுடன் சென்னையில் வைத்துப் பார்த்துக்கொள்ள விரும்புகிறார். தாத்தாவையும் வரவழைக்கிறார். கிராமத்து மனிதரான தாத்தா, தன் ஊரில் நடந்து கொள்வதைப் போலவே சென்னை நகரிலும், குடியிருக்கும் அபார்ட்மெண்டிலும் நடந்து கொள்ள, அக்கம் பக்கத்தவர்களால் ஏகப்பட்ட புகார். விமலின் வேலையும், அமெரிக்கா போகும் கனவும், லட்சுமி மேனனுடனான காதலும் கூட தாத்தாவின் நடவடிக்கையால் சோதனைக்குள்ளாக, கடுப்பான விமல் தாத்தாவைத் திட்டிவிடுகிறார். அந்த நேரம் பார்த்து அந்த அபார்ட்மென்டில், இவர் ஏற்படுத்திய உணவுப் பழக்கத்தால், எலி மருந்தைத் தின்றுவிடுகிறது ஒரு குழந்தை. அவர்களும் ராஜ்கிரணைத் திட்டித் தீர்க்க, ராஜ்கிரண் காணாமல் போகிறார். அவர் கிடைத்தாரா இல்லையா என்பதுதான் க்ளைமாக்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேலும் ராஜ்கிரன் அபார்ட்மென்ட் வளாகத்திலிருக்கும் நீரூற்றில் குளித்து, துணி துவைப்பதும், நகராத காரை வேகமாகத் தள்ளி முன்பக்கத்தை நசுங்க வைப்பதாகக் காட்டுவதும், லேப் டாப்பை டோஸ்டர் என நினைத்து ஸ்டவ்வில் வைத்து வெடிக்க வைப்பதும் கொஞ்சம் அதிகம்தான்!

ஆனால் சடாரென்று அந்தக் காவல் அதிகாரியின் கன்னத்தைப் பதம் பார்க்கும் காட்சியிலும், எச்சில் கையால் காக்காய் ஓட்டாத பக்கத்து வீட்டுக்காரனுக்கு உடல் நலமில்லாத போது அருகிலிருந்து கவனித்துக் கொள்வதும் விக்ரமன் பாணியாக இருந்தாலும் மனசு ரசிக்கிறது!

ராஜ்கிரணின் இயல்பான நடிப்பு அசர வைக்கிறது. இந்த மாபெரும் கலைஞனை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வது இயக்குநர்கள் கையிலிருக்கிறது. ராஜ்கிரண் கடுமையாக நடித்துத் தீர்க்க, விமல் எப்போதும் முகம் தடித்த மாதிரியே வருவதும், லட்சுமி மேனனுக்கும் அவருக்குமான சுவாரஸ்யமற்ற காதலும் படத்தை முழுமைபெறாத சித்திரமாக்கி விட்டன. காட்சியமைப்பில் ஒரு நாடக பாணி இருப்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டும். பாராட்டத்தக்க விஷயம், படத்தின் எந்தக் காட்சியிலும் வன்முறையோ ஆபாசமோ இல்லை என்பதுதான். மசானியின் ஒளிப்பதிவு பரவாயில்லை. திரும்பத் திரும்ப அந்த



அலுவலகம், அபார்ட் மென்ட் மட்டுமே படப்பிடிப்புத் தளம் என்பதால் அவருக்கே போரடித்து விட்டது போலிருக்கிறது. ரகு நந்தனின் இசையில் எல்லாப் பாடல்களுமே முன்பே கேட்ட ரகம்தான். எஸ்.பி.பி பாடியுள்ள அந்த அறிமுக பாடலும், ஒரு டுயட்டும் நன்றாக அமைந்துள்ளன.

உண்மையான பாசத்தையும் உறவுகளின் முக்கியத்துவத்தையும் நகைச்சுவையாகச் சொல்லி, பிறகு அதை அழுத்தமாகப் பதிய வைப்பதற்காக உணர்சிகரமாகப் படத்தை முடித்திருக்கிறார் புதுமுக இயக்குனர் என்.ராகவன்.

அம்மா-மகன், அப்பா-மகன், அண்ணன்-தங்கை, அண்ணன்-தம்பி, பாட்டி-பேத்தி என்று தமிழ்ச் சினிமாவில் உணர்ச்சிக் கடலை உருவாக்கிய திரைப்படங்களின் வரிசையில் இந்தத் தாத்தா-பேரன் படமும் முக்கிய இடம் பிடிக்கும்.

மொத்தத்தில் ஒரு கிராமத்தானின் பாசத்தை நமக்கு வெளிச்சம் போட்டு காட்டுகிறது இந்த மஞ்சப்பை. திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம் தயாரித்த இப்படம் கடந்த ஆவணி 22 ஆம் திகதி சென்னை ரஷ்யன் கல்ச்சர் சென்டரில் நடைபெற்ற பிரிக்ஸ் எனும் உலகத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா (Brazil, Russia, India, China, South Africa) ஆகிய நாடுகள் இணைந்த குழுமத்தின் பெயர் தான் பிரிக்ஸ் (Brics).

இந்த விழாவில் பல்வேறு நாடுகளின் படங்கள் திரையிடப்பட்டன. ஆனால் தமிழ் மொழியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே படம் "மஞ்சப்பை" தான். இது இப்படத்திற்குக் கிடைத்த கூடுதல் மதிப்பு என்று கூறலாம்.

எஸ். ரமணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனித அன்னை தெரேசா

1910 ஆண்டு, ஆகஸ்ட் 10ம் திகதி அன்னை தெரேசா மூன்றாவது குழந்தையாக நிக்கோலா என்ற தனவானுக்கும், திரானா என்பவளுக்கும், யூகோஸ்லாவியா மண்ணில் பிறந்தார். பெற்றோர் அவளுக்குச் சூட்டிய பெயர் அக்னஸ்.

பதினெட்டு வயதில் யூகோஸ்லாவியாவை விட்டுப் புறப்பட்டு 1929 ஜனவரி 6ம் திகதி கல்கத்தா மண்ணைத் தொட்டது முதல் 1997 செப்டம்பர் 5ம் திகதிவரை 58 வருடங்கள் தளராது, தயங்காது, சலிக்காது, வெறுக்காது, ஒதுங்காது, ஓய்வு பெறாது மன வைராக்கியத்துடன் ஆற்றிய அரும் பணிகள் விலைமதிப்பில்லாதவை.

கல்விப்பணியில் அவரது அர்ப்பண சேவையைத் தொடங்கினார்கள். கல்கத்தா புனித மரியாள் கல்லூரியில் 17 வருடங்கள் ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றினார்கள். எனினும் அவரது உள்ளமோ, கல்கத்தா சேரிப்பகுதிகளில் கந்தை உடைகளுடன் எலும்பும் தோலுமாக உலவிவந்த சிறார்களுக்கும், கல்வியின் வாசம் அறியாத ஏழை நெஞ்சங்களுக்கும், வறுமையின் கெடுபிடிக்குள் சிக்கிச் சிதைந்த ஏழைகளுக்கும் பாடுபடவேண்டும் என்ற எண்ணத்திலேயே மேலோங்கி நின்றதால், 1948இல் மோட்டிஜில் சேரிப்பகுதியில் ஐந்து ரூபாய் மூலதனத்துடன் தனது இலட்சியப் பணியை முன்னெடுத்தார். 1950ல் பல்வேறு போராட்டங்களுக்கும் முகங்கொடுத்து சலிக்காது, தளராது மீண்டும் மீண்டும் முயன்று, அன்பின் பணியாளர் சபையை உருவாக்கி தனது பல்துறைப் பரந்த பணிகளை விஸ்தரித்தார்.

அனாதைகளாய் இறந்து மடியும் ஏழைகளைக் கண்டு மனங்கலங்கினார். வறுமை அரக்கனின் பிடியிற் சிக்கி வாழும், நாளெல்லாம் நிம்மதியைத் தேடித் திரிந்தும் கிடைக்காது, துயர முள்ளில் பாய்விரித்து, சாக்கடை ஓரங்களிலும், பிளாட்பார மேடைகளிலும், குப்பைத் தொட்டி அருகிலும் ஏக்கப் பெருமூச்சுடன் பதகழிக்கும் அனாதைகளுக்குச் சாகும்போதாவது அமைதியைத் தரவேண்டும் என்று அன்னை உள்ளம் அங்கலாய்த்தது. அதன் விளைவாக "இறப்போர் நல இல்லம்" உதயமாயிற்று.

மிகக் கொடிய நோயாய்க் கருதப்பட்ட, தொழுநோயால் தாக்கப்பட்டு உடல் நலம் குறைந்து உள்ளம் கலங்கி மெலிந்து வாடும் தொழுநோயாளர்களுக்காக எழுந்தது தான் "தொழுநோயாளர்கள் இல்லம்".

அவரது பணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விரிந்து செல்கையில், அரும்புகளின் அழுகுரல் அவரது இதயத்தைத் தட்டியது. இரக்க மழை பொழிய ஆரம்பித்தது.

பிஞ்சுக் குழந்தைகளை வாரி எடுத்து உச்சி மோர்ந்து அவர்களின் இருள் சூழ்ந்த வாழ்வின் அகல்விளக்கானார் அன்னை தெரேசா. அதன் விளைவு, "குழந்தைகள் காப்பகம்" பிரசவமானது.

கல்கத்தாவில் ஆரம்பித்த தொண்டு, இந்தியா முழுவதும் வியாபித்தது. பின்பு உலக நாடுகளிலும் கொடிகட்டிப் பறந்தது.

மேலும், அருள்சகோதரர்கள் சபையையும், உடன் உழைப்பாளர் சபையையும் அவர் தோற்றுவித்தார். 1965–1970 ஆம் ஆண்டுகளுக்குள் மூன்று கண்டங்களிலும் 9 மடங்களை நிறுவினார்.

மொழி கடந்து, மதம் கடந்து, சாதி வேறுபாடுகள் யாவும் கடந்து இன்னலுற்ற இதயங்களுக்காக தன்னலமற்ற அர்ப்பண சிந்தையில் மகத்தான மனித நேயப் பணியில் தன்னைக் கரைத்துக் கொண்டார் அன்னை தெரேசா.



**அன்னை பதினெட்டு வயதில் யூகோஸ்லாவியாவை விட்டுப் புறப்பட்டு கல்கத்தா மண்ணைத் தொட்டது முதல் 58 வருடங்கள் தளராது, தயங்காது, சலிக்காது, வெறுக்காது, ஒதுங்காது, ஓய்வு பெறாது மன வைராக்கியத்துடன் ஆற்றிய அரும் பணிகள் விலை மதிப்பில்லாதவை.**

அன்னையின் வாழ்வில் எனது நெஞ்சைத் தொட்ட ஒரு சம்பவம்.

கல்கத்தாவின் தெருக்களில் கையேந்தி நிதி வசூல் செய்து கொண்டிருந்தார் அன்னை தெரேசா. ஒரு பெரிய பணக்காரன் வீட்டு முன்வாசலில் வந்து நின்றான். அவன் அன்னையை மதிக்கத் தயாரில்லை. அவன் பார்வையில் அருவருப்பு நிறைந்து வழிந்தது.

பகலிரவாகச் சேவையாற்றும் உயர்ந்த உள்ளத்தின் மகிமை, பெருமைகளை உணராத அந்தக் குள்ள மனங் கொண்ட குபேரன் ஏளனமாகப் பார்த்தான்.

அன்னையும், சகோதரிகளும், கையேந்தியவாறு நின்றுகொண்டிருந்தனர். நீட்டிய கரங்களில் பொற்காசுகளைப் போடவேண்டாம் ஓரிரு இந்திய நாணயங்களையாவது போட்டானா, அந்தக் குள்ள இதயம் படைத்தவன். இல்லை, வேறென்ன செய்தான்....?

நீட்டிய அந்தப் புனித கரங்களில் காறி உமிழ்ந்தான். அருகில் கையேந்தி நின்றிருந்த கன்னியர்கள் மனங் கலங்கி கண்ணீர் மல்கலாயினர்.

அன்னை மனம் கலங்கவில்லை. பொற்காசுகளை கை நிறையப் பெற்றுக்கொண்ட முக மலர்ச்சியோடு தனது கரங்களை எச்சிலோடு சேர்த்து மூடிக் கொண்ட அவர், "இந்த எச்சில் எனக்குப் போதும், எனது ஏழைகளுக்கு ஏதாவது கொடுங்கள்" என்று மிக உருக்கமாகக் கேட்டார். இந்த வார்த்தைகள் அவன் இதயத்தை சுத்திகரித்தது. பொறுமையின் சிகரத்தின் பாதத்தில் விழுந்து மன்னிப்புக் கோரினான். வேண்டிய உதவிகளை வாரி வழங்கினான். அவன் இப்போது மனிதன்.

1997 செப்டம்பர் 5ல் (வெள்ளிக்கிழமை) அன்னை தெரேசா இறைபதம் எய்தினார். சகோதரி நிர்மலாவைத் தலைமைப் பொறுப்பிற்காகத் தெரிவு செய்திருந்தார்.

26ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈராக்கிலுள்ள சிறுபான்மை கிறிஸ்தவர்களுக்கு எதிரான ISIS எனும் அமைப்பின் கொடூரத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

## - இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் அறிக்கை -

ஈராக்கில் சிறுபான்மையினர் அதிலும் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்துத் தாக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாய் உள்ளது. 'மோசல்' பிரதேசத்தில், அதாவது பழைய, புதிய ஏற்பாடுகளில் குறிப்பிட் டுள்ள நினிவே நகரம் கிறிஸ்தவர்களின் கொலைக்களமாகவும், பாரியளவிலான இடப்பெயர்வு இடம்பெறும் களமாகவும் மாறிவிட்டது. தங்களது வீடுகளை விட்டு அகதிகளாக கிழக்கு ஈராக்கின் குர்டிஸ்தன் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ள கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 20 இலட்சத்திற்கும் மேற்பட்டுள்ளது. இதில் சிரியாவிலிருந்து இடம்பெயர்ந்துள்ளவர்களும் அடங்குவர். முன்னர் அங்கிருந்த 35,000 கிறிஸ்தவர்களில் தற்போது அங்கிருப்பவர்கள் சில நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ குடும்பங்களே. ஆயினும், இக்கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல்களை ISIS (ஈராக் மற்றும் சிரிய இஸ்லாமிய இராச்சிய அமைப்பு) எனும் அமைப்பே மேற்கொண்டு வருகிறது.

கிறிஸ்தவர்கள் ஒன்றில் மதம் மாறவேண்டும். இல்லையேல் ஓடித் தப்பவேண்டும். அல்லாது போனால் மரணத்தை எதிர்நோக்க வேண்டிவரும். இக்கட்டளையை ஏற்க மறுத்தோர் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டனர். ISIS அமைப்பானது நாட்டை சரியான நீதியின் படியிலான அடிப்படைவாத இஸ்லாமிய நாடாக மாற்றும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

ISIS அமைப்பின் இச்செயற்பாடுகளை சர்வதேச சமூகம் ஆணித்தரமாகக் கண்டித்து நீதியின் அடிப்படையில் அவர்களுக்கெதிராகத் தகுந்த தண்டனை வழங்கும் வண்ணம் இதைத் தட்டிக் கேட்க முன்வர வேண்டும். ஈராக்கிலுள்ள கிறிஸ்தவர்களின் இந்நிலைமை மறக்கடிக்கப்படா வண்ணம், நாம் அனைவரும் செபத்தில் அவர்களோடு ஒன்றிக்க வேண்டும். இவ்வன்முறைச் சம்பவங்களின் முன் நாங்கள் ஒன்றும் தெரியாதவர்கள் போல் இருக்கமுடியாது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதம செயலர் பன் கி மூன் ஆகியோர் ஏற்கனவே இக்கோரச் செயற்பாடுகள் பற்றிப் பேசியுள்ளனர்.

விசேடமாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இதுபற்றிப் பேசியபோது, மக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதையும், சிறுவர்கள் இக்கொடூர சம்பவத்தினால் தாகத்தினாலும், பசியினாலும் இறந்து மடிந்துள்ளனர் என்றும், பெண்கள் கடத்தப்பட்டதோடு அனைத்துவிதமான வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித் துள்ளார். "இவை அனைத்தும் கடவுளையும், மனித சமூகத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது". மேலும், "பகைமையை கடவுளின் பெயரால் காட்ட முடியாது. போரும் கடவுளின் பெயரால் நடத்தப்பட முடியாது" என்றும் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

அதேவேளை, நாம் இஸ்ராயேல் மற்றும் பலஸ்தீன நாடுகளுக்கிடையில் இடம்பெறும் குண்டுத் தாக்குதல்க ளையும் அதன்மூலம் ஏற்படும் சேதங்கள் மற்றும் பொதுமக்களின் மரணம், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பு போன்றவை பொறுத்துக்கொள்ள முடியாத பாரிய குற்றச் செயல்கள் என்பதால் இவற்றை வன்மையாகக் கண்டிப்பதோடு, சர்வதேச சமூகம் இதுபற்றி விசேட கவனத்தைச் செலுத்தி மனித சமூகத்திற்கெதிரான இக்கொடுமைகளை நிறுத்துவதற்கான ஆக்கபூர்வமான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

✠ அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை
தலைவர்
பேராயர் கொழும்பு உயர் மறைமாவட்டம்.

CATHOLIC BISHOPS' CONFERENCE SRI LANKA
21 ஆவணி 2014


✠ மேதகு கலாநிதி வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை
செயலர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தீர்க்க தரிசனங்களின் நிலம்

பயணக் கட்டுரை 07




எங்கள் பயணத்தோடு சம்பந்தப்படாத ஓர் இடத்தைச் சந்திக்க நேர்ந்தது வழியில், அதுதான் 'அனர்த்தங்களின் அருங்காட்சியகம்' என அழைக்கப்படும் *'HOLOCAUST MUSEUM'*.

இரண்டாம் உலகப் போரின் போது (1933-1945) ஹிட்லரால் கொல்லப்பட்ட ஆறு மில்லியன் யூதர்களில், ஒன்றரை மில்லியன் குழந்தைகளின் நினைவாக ஏற்படுத்தப்பட்ட ஒரு நினைவிடம். (குறிப்பாக போலந்தின் *Auschwitz, Sobitor, Treblika, Maidanel,* ஜேர்மனியின் *Belsen, Buchenwald, Dachav* போன்ற கொலைக் களங்கள் உலகப் பிரசித்திபெற்றவை).

இந்த நினைவிடத்தை நாடொன்றில் வாழும் யூதத் தனவந்த ரொருவர், தன் மகனின் பெயரால் நிறுவியுள்ளார். அந்த யூதர் எவ்வாறு உயிர் பிழைத்தார் எனக் கேட்கலாம்.....

அந்த வேளைகளில் குடும்பமாய் இறப்பதைவிட யாராவது ஒருவர் உயிர் தப்பி வாழ வேண்டுமென்பதற்காகக் குடும்ப அங்கத்தினர் களை ஆங்காங்கு விட்டுச் சிதறிப் போனார்கள். அதேவேளை ஜெர்மனி யின் நல்லிதயம் படைத்த சிலர், யூதர்களைத் தங்கள் பண்ணைகளில் வேலைக்கமர்த்தி அவர்களின் உயிர்களைக் காப்பாற்றினார்கள். (ஜேர்மனியின் பண்ணைகளில் வேலை செய்த யூதர்களை ஹிட்லர் எதுவும் செய்யவில்லை என்பது கவனத்திற்குரியது)

இவ்வாறு உயிர் தப்பிப் பிழைத்த ஒருவரால் வடிவமைக்கப்பட்டதே இந்த இடம். உள் நுழைந்தால் ஒரே இருட்டு. மகாமசாதான அமைதி. சுமார் நானூறு ஐநூறு மீட்டர் சதுரத்துக்கு வளைந்து வளைந்து செல்ல வேண்டும். ஒரேயொரு மெழுகுதிரியின் ஒளி, நாம் செல்லும் இடமெங்கும் ஆயிரம் நட்சத்திர பிம்பங்களாய் ஒளி தெறிக்கக் கூடியவாறு கண்ணாடியால் முற்றிலும் ஆனது அது. சிறிது தூரம் நடந்தால் கண்கள் பழகிவிடும். மிகச் சன்னமாகக் கொலையுண்ட குழந்தைகளின் பெயர்கள் வாசிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**23ம் பக். தொடர்....**

உலகிலேயே பிரசித்தி வாய்ந்த 21 விருதுகள் அவரை அலங்கரித்தன. 1979ல் நோபல் பரிசு கிடைத்தது.

சுமார் 50 நாடுகளின் தலைவர்கள், இராணிமார் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டார்கள். இலட்சோப இலட்சம் மக்கள் வழி நெடுகிலும் கண்ணீர் பெருக்கிய வண்ணம் நகர்ந்தனர்...

அன்னையின் வாழ்க்கை வரலாறு ஏழை மக்களுக்குத் தொண்டாற்ற விரும்பும் அனைவருக்கும் பெரும் உத்வேகத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.




- வியஜ் சரோஜா -

இவ்வாறு ஒரு குழந்தையின் பெயர் மீண்டும் ஒலிக்கப் பல வருடங்கள் ஆகுமாம்....

அதுமட்டுமன்றி, அந்த வளாகத்தை ஒரு மரத்தோப்பாக்கி, தங்களைக் காப்பாற்றிய ஜெர்மனியர்களின் பெயர்களை ஒவ்வொரு மரத்துக்குமிட்டு, அவர்களின் விலாசங்களைக் கூட அதில் பதிவு செய்திருக்கிறார்கள். அந்தளவு நன்றி விசுவாசம். அந்த அருங்காட்சியகத்துக்குள் சென்றுவந்தால் வேறெதிலுமே நாட்டம் இல்லாமல் போகும். அத்தனை தூரம் நெஞ்சை உலுக்கும் அமைப்பு அது!





நமது நெஞ்சங்களையே அது அந்தளவு உலுக்கியதென்றால் யூதர்களைக் கேட்க வேண்டுமா....? இவ்வாறு பார்த்த இடங்களின் பட்டியலில் ஆலயங்களே அடங்குவதால் அவைகளை விட்டு விடுகிறேன்.

இதுவரை நாம் 'கல்வாரி மலை'யென்பதை ஏதோ ஒரு பெரிய உயர்ந்த மலையென்றுதான் கற்பனை செய்திருப்போம். ஆனாலது அப்படியல்ல. சுமார் நூறு மீற்றர் உயரத்துக்குள்ளும் அடங்காத சிறு குன்று. அந்தக் குன்றையே ஒரு முழுக் கோவிலாக்கி வைத்திருக்கிறார்களென்றால் அதன் உயரத்தை நீங்களே கற்பனை செய்யலாம். இவ்வாறு நாம் கற்பனை செய்து வைத்திருக்கும் பல விடயங்கள், அவற்றுக்கு எதிர்மாறானவை.

இயேசுவை அடக்கஞ் செய்த இடங்கூட யூதர்களுக்குச் சொந்தமானதல்ல. அது ஒரு முஸ்லீமுக்குச் சொந்தமானது. அவர் நினைத்தால் அந்த இடத்தை பூட்டிவைக்கலாம். ஆனால் இதுவரை அவ்வாறு நிகழவில்லையென்பதும் ஓர் அதிசயம்தான். அந்த இடத்தில் விதவிதமான மொழிகளில், விதவிதமான முறைகளில் அனுஷ்டானங்கள் இடம்பெறுவதே ஒரு பரவசமூட்டும் நிகழ்வு. வழிபாட்டில் அவர்கள் காட்டும் தீவிரம் நம்மை வெட்கம் கொள்ளச் செய்கின்றது.

**- தொடரும் .....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.09.2014

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் - 135

யோசுவா : 15:1–19

(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

யூதா மக்களின் குலக் குடும்பங்களுக்குக் கிடைத்த நிலப்பகுதி தெற்கே ஏதோம் வரையிலும் அதன் தென்கோடி எல்லை சீன் பாலை நிலம் வரையிலும் அமைந்திருந்தது. தென் எல்லை சாக்கடலின் தென்முனைவளைவிலிருந்து, தெற்கு நோக்கி ...................... மேட்டைத் தாண்டி, சீன் பாலை நிலத்தைக் கடந்து, தெற்கே காதேசு பர்னேயாவை நோக்கி மேலே ஏறுகிறது. எஸ்ரோனைக் கடந்து, அத்தார் வரை ஏறி கர்க்காவை நோக்கித் திரும்புகிறது. அட்சமோனைக் கடந்து, எகிப்தின் நதியைத் தொட்டுக் கடலுடன் முடிவடைகிறது. இதுவே உங்கள் தென் எல்லை. கிழக்கு எல்லை ...................... முகத்துவாரம் வரையுள்ள சாக்கடல்: வட எல்லை யோர்தானின் முகத்துவாரத்திலிருந்து தொடங்கி பேத்தொகிலா வரை மேலேறி, வடக்கே பெத்தராபாவரை செல்கிறது. இவ்வெல்லை தொடர்ந்து ரூபனின் மகன் போகனின் கல்வரை செல்கிறது. இவ்வெல்லை ...................... பள்ளத்தாக்கிலிருந்து தெபீர் வரை சென்று பள்ளத்தாக்கிற்குத் தெற்கே அதும்மிம் மேட்டுக்கு எதிரே உள்ள கில்காலுக்குப் பக்கமாக வடக்கே ஓடி, ஏன்செமசு நீர் நிலைகளைத் தொட்டு ஏன் ரோகேல் வரை செல்கிறது. மேலும், இவ்வெல்லை இன்னோம் பள்ளத்தாக்கின் வழியே சென்று ...................... தென் அரணாகிய எருசலேம் வழியாக மேற்கே இரபாயிம் பள்ளத்தாக்கின் வட எல்லையாகிய இன்னோம் பள்ளத்தாக்கின் எதிரே உள்ள மலை உச்சிவரை செல்கிறது. மேலும் இவ்வெல்லை மலை உச்சியிலிருந்து நெப்தோவாகு நீரூற்று வரை எபிரோன் மலைநகர்களுக்கு வெளியே செல்கிறது. பிறகு இவ்வெல்லை ......................, அதாவது கிரியத்து எயரிமுக்குச் செல்கிறது. மேலும் இவ்வெல்லை பாலாவின் மேற்கே சேயீர் மலையை நோக்கிச் சுற்றுகிறது. எயாரிம் மலையின் வடக்குச் சரிவான கெசலோன் பக்கம் செல்கிறது. பெத்சமேசில் இறங்கித் திம்னா பக்கம் செல்கிறது. பிறகு, இவ்வெல்லை எக்ரோனின் வடக்கிலுள்ள மலைச் சரிவில் சென்று ...................... சுற்றுகிறது. பிறகு பாலா மலையைக் கடந்து, யாப்னவேலுக்குச் சென்று கடலில் முடிவடைகிறது. மேற்கு எல்லை பெருங்கடல், இவையே யூதா மக்களின் குடும்பங்களைச் சுற்றி அமைந்த எல்லைகள். யோசுவாவுக்கு ஆண்டவர் கட்டளையிட்டபடி, எபுன்னேயின் மகன் காலேபுக்கு யோசுவா யூதாவின் நடுவில் ...................... என்ற கிரியத்து அர்பா நிலப்பகுதியை அளித்தார். அர்பா என்பவன் ஆனாக்கின் தந்தை. சேசாய், அகிமான், தல்மாய் என்ற ஆனாக்கின் மூன்று புதல்வர்களைக் காலேபு துரத்திவிட்டார். அங்கிருந்து அவர் தெபீர் வாழ் மக்களுக்கு எதிராகச் சென்றார். கிரியத்சேபர் என்பது தெபீரின் முன்னைய பெயர். "கிரியத்து செபேரை ...................... கைப்பற்றுபவருக்கு என் மகள் அக்சாவை மனைவியாகக் கொடுப்பேன்" எனக் காலேபு அறிவித்தார். காலேபின் சகோதரர் கெனாசின் மகன் ஒத்னியேல் அதைக் கைப்பற்றவே காலேபு மகளை அவனுக்கு மனைவியாக்கினார். அவள் வந்தபோது தந்தையிடமிருந்து ஒரு ...................... கேட்குமாறு அவளைத் தூண்டினார் ஒத்னியேல். எனவே, மகள் மீண்டும் தந்தையிடம் வந்தபோது "உனக்கு என்ன வேண்டும்" எனக் கேட்க, அவள் "எனக்கு ஓர் அன்பளிப்புத் தரவேண்டும். நீர் எனக்கு வறண்ட நிலத்தைக் கொடுத்துள்ளீர். இப்பொழுது எனக்கு ...................... தாரும்" என்றாள். அவர் அவளுக்கு, மேல் ஊற்றுகளையும், கீழ் ஊற்றுகளையும் கொடுத்தார்.

**விடைகள்:** **சிக்ரோனை, எபிரோன், தாக்கி, நிலம், நீரூற்றுகளையும், பாலாவுக்கு, எபூசியரின், ஆக்கோர், யோர்தானின், அக்கிரபிம்**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 135

**பரிசுப் போட்டி**




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. தமிழில் முதலில் தோன்றிய இலக்கண நூல்
(நன்னூல் - கொடுந்தமிழ் இலக்கணம் - தொல்காப்பியம்)

2. 'கங்கையில் விடுத்த ஓலை' என்னும் நூலை எழுதிய தமிழ் அறிஞர்
(மீனாட்சி சுந்தரம்பிள்ளை - சுவாமி விபுலானந்தர் - உ.வே. சாமிநாதய்யர்)

3. இரத்தச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்தவர்
(வில்லியம் ஹார்வே - பிரெட்றிக் கன்டின் - வில்ஹேம் சன்ட்சன்)

4. சூரிய மண்டலத்தில் உள்ள மிகச் சிறிய கோள்
(பூமி - வெள்ளி - புதன்)

5. 'விம்பில்டன்' என்னும் இடம் எந்த விளையாட்டுக்குச் சிறந்தது
(போலோ - ரென்னிஸ் - குதிரை ஓட்டம்)

6. இரண்டாம் வேற்றுமை உருபுக்குப் பின் வல்லெழுத்து மிகும் வாக்கியம்
(மணியை கண்டேன் - இத்தனை பெரியது - வந்து சென்றான்)

பெயர் : ........................................................................................

முகவரி: ........................................................................................

........................................................................................

தொ.பே.இல. ........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் – 135
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## விவிலியம் கற்போம் - 133 விடைகள்

அரசர்கள், அராபேரிலிருந்து, அராபா, ஒசின் எல்லையான, மனாசேயின், சேயிர், மலைச்சரிவு, ஜெருசலேம், தானாக்கு

(விடைகள் தவறுதலாக மாறி வந்திருந்தும், சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிவைத்த தம்பி தங்கையருக்கு எமது பாராட்டுகள்)

## அறிவை வளர்ப்போம் - 133 விடைகள்

1. 1945
2. டால்ஸ்டாய்
3. அலுமினியம்
4. கல்லீரல்
5. உவமைத்தொகை
6. பதினாறடி

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்**

- A. லிசாந்தன் ஒலிவர்
169/1A, லூர்த்து அன்னை வீதி,
பார்வீதி, மட்டக்களப்பு.
- A. மிதுஷா
169/1, லூட்ஸ் ஒழுங்கை,
பார்வீதி, மட்டக்களப்பு.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்**

- R. தனுஸ்ரன்,
இல. 32, சித்திவிநாயகர் வீதி,
அமிர்தகழி, மட்டக்களப்பு.
- அபிஷெஹான் துஷ்யந்தன்,
இல. 28, படுகாட்டார் வீதி,
நாவற்குடா,
மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 84 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
தவராஜா மனோச்காந்
இல. 16,
புதிய வன்னியனார் வீதி,
மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
ரெ. ரிசாலுஜன்,
மே/பா. ரெனிஸ்கிறே
2ம் குறுக்குத் தெரு,
எல்லைவீதி, யூனியன் கொலனி,
மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
ப. பிரார்த்தனா குமாரி விமலா,
கல்குடா வீதி,
பேத்தாழை.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


மட்டக்களப்பில் நடைபெற்ற
“உலகத் தொடர்பு தின விழா”
ஆகஸ்ட் 29ம்
திகதி வரை